செய்தி வெளியீடு எண்: 537 நாள் : 07.10.2013

## செய்தி வெளியீடு

சமூகத்தில் அனைத்து தரப்பு மக்களும் வாழ்வில் முன்னேற்றம் எய்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

அந்த வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொடக்க வேளாண்மை சங்கங்களிடமிருந்து விவசாயக் கடன் பெற ஏதுவாக வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. வட்டியில்லா பங்கு மூலதனக் கடன்கள் வழங்குவதன் மூலம் இவர்களது கடன் வாங்கும் திறன் அதிகரிக்கப்படுகிறது. இந்த அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் பங்கு மூலதனத் தொகை, அதிக அளவு கடனுதவி பெறுவதற்கு போதுமானதாக இல்லாததைக் கருத்தில் கொண்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களில் 40,000 பேர் பயன் பெறும் வகையில், பங்கு மூலதனத்தை 250 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தியும், அதனை மானியமாக வழங்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்ற ஆண்டு உத்தரவிட்டார்கள். இதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் உத்தரவிட்டார்கள். அரசின் இந்த நடவடிக்கையால் அவர்கள் அதிகபட்சமாக 50,000 ரூபாய் வரை கடன் பெற வழிவகை செய்யப்பட்டது.

அதேபோன்று, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் நகர கூட்டுறவு வங்கிகளிலிருந்து சிறுதொழில், பண்ணை சாரா மற்றும் வணிகக் கடன் பெற ஏதுவாக ஆண்டுதோறும் 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கென தலா 500 ரூபாய் வீதம் பங்கு மூலதனமாக வட்டியில்லாக் கடனாக 5 லட்சம் ரூபாய் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது வழங்கப்பட்டு வரும் பங்கு மூலதனத் தொகை, அதிக அளவு கடனுதவி பெறுவதற்கு போதுமானதாக இல்லாததைக் கருத்தில் கொண்டு, நகர கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களின் பங்கு மூலதனத்தை 500 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தியும், அதனை மானியமாக வழங்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 2 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் 10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்கள் பயன் பெறுவர்.

அரசின் இந்த நடவடிக்கை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதார நிலையை உயர்த்த துணை புரியும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள்:- 7.10.2013.